**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I
8075807

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C

1. District : திருநெல்வேலி
மாவட்டம்
PS: ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு
காவல்நிலையம்
Year 2021
ஆண்டு
FIR No.: 10/2021
மு.த.அ. எண்
Date: 01.10.2021
நாள்

2. (i) Act சட்டம்: PC Act 1988 (as amended in) Act 16 of 2018 — Sections பிரிவுகள்: 7(a) r/w
(ii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Cr.PC — Sections பிரிவுகள்: 102 Cr.PC
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day :
குற்ற நிகழ்வு நாள்
Date from : நாள் முதல் 30.09.2021
Date to : நாள் வரை
Time Period : நேர அளவு
Time from : நேரம் முதல் 10.00 hrs to
Time to : நேரம் வரை 17.00 hrs
(b) Information Received at PS. Date :
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 01.10.2021
Time : நேரம் 10.30 hrs
(c) General Diary Reference : Entry No(s)
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்
Time : நேரம்

4. Type of Information : Written/ Oral :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக எழுத்துமூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் Joint II Sub Registrar office, Tirunelveli, 5 Km West.
Beat Number : முறைக் காவல் எண்
(b) Address : முகவரி
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்
District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : S.K.கனகராஜ்
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர்
(b) Father's/ Husband's Name திரு.சுப்பையா
தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth 07.05.1970
நாள் / பிறந்த ஆண்டு
(d) Nationality : இந்தியன்
நாட்டினம்
(e) Passport No. :
வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue வழங்கப்பட்ட நாள்
Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation மாவட்ட வட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலரின் நேர்முக உதவியாளர்
தொழில்
(g) Address : மாவட்ட வட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலகம்.
முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவை ஏனில் தனித்தாள் இணைக்கவும்)
1) திரு.S.உமாபதி, இணை சார் பதிவாளர், இணை சார் பதிவாளர் எண் II அலுவலகம், திருநெல்வேலி, 2) திரு.சண்முகநாதன், S/o கிருஷ்ணன், கேமரா இயக்குபவர், 3) திரு.குமார், S/o திருவடி, ஓய்வு பெற்ற வைப்பறை எழுத்தர், 4) திருமதி.ஜெயராணி, W/o லாரன்ஸ், தகவல் தொகுப்பு பணியாளர், 5) திருமதி.முத்துலட்சுமி, W/o முருகன், எண்.90, தையல்கார தெரு, டவுண், 6) திரு.பெரியசாமி, த/பெ சங்கரநாராயணன், 109A, VOC தெரு, திருநெல்வேலி, 7) திருமதி.N.ஜெயா, பத்திர எழுத்தர், W/o சண்முகம், எண்.832E, கோமதி நகர் மேற்கு, சுத்தமல்லி, 8) திரு.முத்துக்குமாரசாமி, த/பெ.சங்கரவேல் எண் 35, அசோகா வீதி 2வது தெரு, குறிச்சி, 9) திரு.முத்துப்பாண்டியன், S/o சுந்தர்ராஜன், எண்.57, மதுரை ரோடு, தச்சநல்லூர்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
[illegible]

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது. இன்று 01.10.2021ம் தேதி சுமார் 10.30 மணிக்கு துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருநெல்வேலி E.மெக்லரின் எஸ்கால் ஆகிய நான் அலுவலக பொறுப்பில் இருக்கும்போது திருநெல்வேலி மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலரின் நேர்முக உதவியாளர் திரு.S.K.கனகராஜ் அவர்கள் நிலையம் ஆஜராகி ஒரு புகார் மனுவுடன் செயல்முறை நடவடிக்கை நாள் 30.09.2021-ம் இணைத்து கொடுத்து நடவடிக்கை எடுக்க வேண்டி கொடுத்தார். அந்த மனு விபரம் பின்வருமாறு: அனுப்புனர் S.K.கனகராஜ், மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலரின் நேர்முக உதவியாளர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், திருநெல்வேலி. பெறுனர் காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருநெல்வேலி. அய்யா, பொருள்: திருநெல்வேலி இணை சார் பதிவாளர் எண்.ஐஐ அலுவலகத்தை திடீர் சோதனை செய்து கணக்கில் காட்டப்படாத பணம் கைப்பற்றியது தொடர்பாக. திருநெல்வேலி இணை சார் பதிவாளர் எண்.II அலுவலக அலுவலர்கள் ஆவணங்கள் பதிவு செய்வதற்கு பணம் வசூல் செய்வதாக 30.09.2021-ம் தேதி மாலை சுமார் 16.00 மணியளவில் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில்

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ........................ Rank ........................ to take up the Investigation / Refused Investigation / transferred to PS.......................................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ................................ பதவி ........................ நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ........................................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

[signature] 1.10.2021
(S.K. Kanagaraj)

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

[signature] 1/10/21

15. Date & Time of despatch to the court
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
01.10.21
13.00 hrs.

Name: பெயர்: E. MECLARINE ESKHOL.
Rank: நிலை: DSP. VBAC
Tirunelveli.

திருநெல்வேலி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் திரு.E.மெக்லரின் எஸ்கால் அவர்களுடன் இணைந்து காவல் ஆய்வாளர் திருமதி.J.அனிதா, திருநெல்வேலி மாவட்ட ஆய்வுக்குழு ஆய்வாளர் திரு.மு.முகமது இப்ராஹிம் மற்றும் போலீசார் உதவியுடன் மேற்படி திருநெல்வேலி இணை சார் பதிவாளர் எண்.II அலுவலகத்தை மாலை 17.20 மணி முதல் 23.45 மணி வரை திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டது. அப்போது மேற்படி அலுவலகத்தில் இருந்த இணை சார் பதிவாளர் எண்.II திரு.S.உமாபதி என்பவரிடமிருந்து ரூ.12,920/-ம், டேட்டா எண்ட்ரி ஆப்பரேட்டர் திருமதி.M.ஜெயராணி என்பவரிடமிருந்து ரூ.550/-ம், கேமரா ஆப்பரேட்டர் திரு.K.சண்முகநாதன் என்பவரிடமிருந்து ரூ.14,610/-ம், அதே அலுவலகத்தில் பதிவறை எழுத்தராக இருந்து ஓய்வு பெற்று அங்கு அனுமதியின்றி பணிபுரிந்து வரும் திரு.T.குமார் என்பவரிடமிருந்து ரூ.440/-ம், அனுமதியின்றி தற்காலிகமாக பணிபுரியும் திரு.S.முத்துபாண்டியன் என்பவரிடமிருந்து ரூ.5,600/-ம், திரு.S.பெரியசாமி என்பவரிடமிருந்து ரூ.5,960/-ம், தனிநபர்களான திரு.S.முத்துக்குமாரசாமி என்பவரிடமிருந்து ரூ.12,160/-ம், திருமதி.M.முத்துலெட்சுமி என்பவரிடமிருந்து ரூ.29,030/-ம் மற்றும் திருமதி.N.ஜெயா என்பவரிடமிருந்து ரூ.6,000/-ம் ஆக மொத்தம் பணமாக ரூ.87,270/- கைபற்றப்பட்டது. மேற்படி பணத்திற்கு மேற்படியார்கள் தகுந்த முகாந்திரம் சொல்லாத காரணத்தினாலும், தனித்தனியாக இருந்தபடியாலும், மேற்படி பணம் கையூட்டாக பெற்ற பணமாகவும் இருக்கலாம் அல்லது கையூட்டாக கொடுக்க வைத்திருந்த பணமாகவும் இருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் கைபற்றப்பட்டது. இது தொடர்பாக செயல்முறை நடவடிக்கை நேற்று (30.09.201) மாலை 17.20 மணிக்கு ஆரம்பித்து இரவு 23.45 மணிக்கு முடிக்கப்பட்டது. மேற்படி அலுவலகத்தில் இருந்த இணை சார் பதிவாளர் எண்.II திரு.S.உமாபதி, டேட்டா எண்ட்ரி ஆப்பரேட்டர் திருமதி.M.ஜெயராணி, கேமரா ஆப்பரேட்டர் திரு.K.சண்முகநாதன், முன்னாள் பதிவறை எழுத்தர் திரு.T.குமார், தனிநபர்களான திரு.S.முத்துபாண்டியன், திரு.S.பெரியசாமி, திரு.S.முத்துக்குமாரசாமி, திருமதி.M.முத்துலெட்சுமி மற்றும் திருமதி.N.ஜெயா ஆகியோர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டி கைப்பற்றப்பட்ட பணம், செயல்முறை நடவடிக்கை மற்றும் ஆவணங்களை தங்களிடம் ஒப்படைக்கிறேன். ஒம்.(S.K.கனகராஜ்), மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலரின் நேர்முக உதவியாளர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், திருநெல்வேலி. 30.09.2021ம் தேதி திருநெல்வேலி தாலுகா அலுவலகத்தின் மேல்புறம் அமைந்துள்ள திருநெல்வேலி இணை II சார்பதிவக அலுவலகத்தை திருநெல்வேலி, மாவட்ட வழங்கல் மற்றும்

நுகர்வோர் பாதுகாப்பு அலுவலரின் நேர்முக உதவியாளர் திரு.S.K.கனகராஜ் அவர்கள் தலைமையில் திடீர் சோதனை செய்தது சம்மந்தமான செயல்முறை நடவடிக்கைகள். முன்னிலை : திரு.S.K.கனகராஜ், மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலரின் நேர்முக உதவியாளர், திருநெல்வேலி. 2).திரு.E.மெக்லரின் எஸ்கால், காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருநெல்வேலி. 3).திருமதி.J.அனிதா, காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருநெல்வேலி. 4) திரு.மு.முகமது இப்ராஹிம், ஆய்வுக்குழு ஆய்வாளர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், திருநெல்வேலி இன்று 30.09.2021ம் தேதி மாலை 16.00 மணிக்கு திருநெல்வேலி இணை சார் பதிவாளர் எண் II அலுவலக ஊழியர்கள் ஆவணங்கள் பதிவு செய்வதற்கு பணம் வசூல் செய்வதாக கிடைத்த இரகசிய தகவலின்படி திருநெல்வேலி மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலரின் நேர்முக உதவியாளர் திரு.S.K.கனகராஜ் அவர்கள் திருநெல்வேலி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் திரு.E.மெக்லரின் எஸ்கால், ஆய்வுக்குழு ஆய்வாளர் திரு.மு.முகமது இப்ராஹிம், காவல் ஆய்வாளர் திருமதி.J.அனிதா பெண் காவலர் திருமதி.பிரவீனா மற்றும் காவலர்கள் சகிதம் திருநெல்வேலி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் இருந்து மாலை சுமார் 17.00 மணியளவில் காவல் வாகனம் TN 21 G 0489-ல் புறப்பட்டு வண்ணாரப்பேட்டை, ஸ்ரீபுரம் வழியாக வந்து சுமார் 17.20 மணிக்கு S.N.ஹைரோடு தென்புறம் மாநகராட்சி அலுவலகத்திற்கு மேல்புறம் உள்ள திருநெல்வேலி தாலுகா அலுவலகத்திற்கு வரும் வழியாக உள்ளே வந்து மேற்படி அலுவலகத்தின் மேற்புறம் மேற்கு பார்த்து பார்த்து அமைந்துள்ள திருநெல்வேலி இணை சார்பதிவாளர் எண் II அலுவலகத்தின் மெயின் கேட் வழியாக உள்ளே வந்ததும், வராண்டாவில் நின்று கொண்டிருந்த பெயர் கேட்டு தெரிந்து கொண்ட திரு.பெரியசாமி, த/பெ சங்கரநாராயணன், கதவு எண் 109A, VOC தெரு, திருநெல்வேலி என்பவரை விசாரணை செய்தபோது அவர் தான் திரு.முத்துக்குமாரசுவாமிக்கு பத்திரம் வாபஸ் பெறவேண்டி உடன் வந்தாக கூறினார். அவர் கையில் இருந்த ஆவண எண் 1305/2021-ன் அசல் மற்றும் அதன் நகல் வைத்திருந்தார். மேற்படி ஆவண எண் 1305/2021-ன் நகல் மட்டும் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. திரு.பெரியசாமியை சோதனை செய்தபோது அவரது சட்டை பாக்கெட்டில் கத்தையாக இருந்த பணத்தை எடுத்து எண்ணிப்பார்த்தபோது அதில் ரூ.5,960/- (2000X1=2000, 500X6=3,000, 200X1=200, 100X6=600, 50X1=50, 20X2=40, 10X7=70)-ம் இருந்தது. மேலும் அந்த பணத்துடன் திரு.நாலாயிரம் ஆண்டியப்பன் பெயரில் உள்ள குடும்ப அட்டை

எண்.NPHH 333863429884, திரு.பெரியசாமி ஓட்டுனர் உரிமம் எண் TN 7220120002439, திரு.பெரியசாமி ஆதார் கார்டு எண் 8949 0841 3452-ன் நகல், திரு.பெரியசாமி வாக்காளர் அடையாள அட்டை எண் TWX0976266 அசல், திருமதி.அமிர்த ரோஸ்லின் சுதேஸ்ராஜ் என்பரின் ஆதார் கார்டு எண் 6317 2499 1633-ன் நகல், திரு.வீரபாகு என்பவரின் ஆதார் கார்டு எண் 2793 5737 8716-ன் நகல் ஆகியவை இருந்தது. திரு.பெரியசாமி வைத்திருந்த பணத்தை பற்றி அவரிடம் கேட்டபோது சரியான முகாந்திரம் சொல்லாததால் பணம் ரூ.5,960/- கைப்பற்றப்பட்டது. மேற்படி ஆவணங்களும் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. சார்பதிவகத்தின் உள்ளே நுழைந்ததும் வாசல் அருகே நின்று கொண்டிருந்த பெயர் கேட்டு தெரிந்து கொண்ட திரு.முத்துக்குமாரசாமி, த/பெ.சங்கரவேல் எண் 35, அசோகா வீதி 2வது தெரு, குறிச்சி, மேலப்பாளையம் என்பவரை விசாரணை செய்தபோது தான் பதிவு செய்த பத்திரத்தை வாபஸ் வாங்க வந்ததாக தெரிவித்தார். அவர் வைத்திருந்த பேக்கை சோதனை செய்தபோது அதில் GRT Customer Receipt book எண் 6884915 மற்றும் 6884916 இருந்தது. மேற்படி இரண்டு புத்தகத்திலும் தலா ரூ.10,500/- வைத்திருந்தார். மேற்படி பணம் குறித்து கேட்டபோது தான் GRT ஜுவல்லரி கடையில் நகைக்கடன் கட்டுவதற்காக கொண்டு வந்ததாக தெரிவித்தார். அதனை மேற்படி பாஸ்புத்தகத்தோடு சரிபார்த்தபோது சரியாக இருந்ததால் மேற்படி பணம் ரூ.21,000/- அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. இரண்டு பாஸ்புத்தகமும் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. அவரது சட்டை பாக்கெட்டை சோதனை செய்தபோது அதில் ரசீது எண் 5288/2021 உடன் இரண்டு கத்தையாக பணம் வைத்திருந்தார். முதல் கத்தையை எண்ணிப்பார்த்தபோது அதில் ரூ.10,000/- (500X20=10,000)மும், மற்றொரு கத்தையில் ரூ.2,160/- (500X4=2000, 100X1=100, 50X1=50, 10X1=10) இருந்தது. மேற்படி பணம் பற்றி அவர் தகுந்த முகாந்திரம் கூறாததால் மேற்படி பணம் ரூ.12,160/- மற்றும் ரசீதும் கைப்பற்றப்பட்டது. அப்போது உள்ளே வந்த பெயர் கேட்டு தெரிந்து கொண்ட திருமதி.ஜெயாவை விசாரித்தபோது அவர் தான் ஆவண எழுத்தராக இருப்பதாக சொன்னார். அவருடன் வந்த பெயர் கேட்டு தெரிந்து கொண்ட திருமதி.முத்துலெட்சுமியை விசாரித்தபோது அவர் ஆவணங்கள் எழுதி கொடுப்பதாகவும், ஆனால் தான் பதிவு பெற்ற ஆவண எழுத்தராக இல்லை என்றும் தெரிவித்தார். மேற்படி இருவரையும் அவர்கள் கையில் வைத்திருந்த பைகளையும் ஆய்வாளர் திருமதி.J.அனிதா மற்றும் பெண் காவலர் திருமதி.பிரவீனா ஆகியோர் சார்பதிவாளர் அறைக்கு கீழ்புறம் உள்ள பழைய ஆவணங்கள் வைப்பறையில் வைத்து சோதனை செய்தனர். திருமதி.ஜெயா என்பவர் வைத்திருந்த பையில் GRT Jewellery என்று குறிப்பிடப்பட்ட மெருன் மற்றும் சாம்பல் நிற பர்சில் கத்தையாக இருந்த பணத்தை எடுத்து

எண்ணிப்பார்த்தபோது அதில் ரூ.6,000/- (500X9=4,500, 200X4=800, 100X6=600, 50X2=100) இருந்தது. மேற்படி பணம் குறித்து திருமதி.ஜெயாவிடம் கேட்டபோது சரியான முகாந்திரம் சொல்லாததால் பணம் ரூ.6,000/- பர்சுடன் கைப்பற்றப்பட்டது. மேலும் அவர் வைத்திருந்த பச்சை நிற பைல் பேக்கில் திரு.அந்தோணி சாமி என்பவரின் ஆதார் கார்டு எண் 9179 4840 4005-ன் நகலும், ஜெயா பத்திர எழுத்தர் உரிமம் எண் A858/TLY/1992 அடையாள அட்டை, திருமதி.ஜெயாவின் ஆதார் கார்டு எண் 6887 5480 9117 அட்டையின் நகல், திரு.சுந்தர்ராஜ் என்பவரின் மகன்களுக்காக தயாரிக்கப்பட்ட நான்கு பாக பாத்திய விடுதலை பத்திரத்தின் வரைவு ஆவணங்களை இணை சார்பதிவாளர் திரு.உமாபதியால் சரிபாக்கப்பட்டது என குறிப்பிடப்பட்டதும் மற்றும் டைரி 2020 Holybell ஜெயா பெயரில் உள்ளதும் இருந்தது. மேற்படி ஆவணங்கள் அனைத்தும் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. திருமதி.முத்துலட்சுமி என்பவர் வைத்திருந்த பையை சோதனை செய்தபோது அதில் Smart Adventure என்று பொறிக்கப்பட்ட நீல நிற கைப்பையில் இருந்த பணத்தை எடுத்து எண்ணிப்பார்த்தபோது ரூ.29,030/- (500X57=28,500, 200X2=400, 100X1=100, 10X3=30) இருந்தது. மேலும் அந்த கைப்பையில் “09.09.21 எட்டாங்குளம் ஈஸ்வரன் விடுதலை-2 பத்திரம் மொத்தம் 20000, வரவு 10000” என்று எழுதப்பட்ட துண்டு சீட்டு ஒன்றும், “19.07.21 ஆனந்தபுரம் கோமு உயில் Total 3,500 வரவு 2000” என்று எழுதப்பட்ட துண்டு சீட்டு ஒன்றும், “19.08.21 பாஞ்சாலராஜன் திருநெல்வேலி டவுண் EC வகைக்கு மற்றும் கணக்குகள்” எழுதிய துண்டு சீட்டு ஒன்றும், “நாகராஜன் பழையபேட்டை Total 6000 வரவு 5000” என்று எழுதப்பட்ட துண்டு சீட்டு ஒன்றும் இருந்தது. மேற்படி பணத்துடன் பர்சும் மற்றும் மேற்குறிப்பிட்ட துண்டு சீட்டுகளும் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. வராண்டாவில் இருந்து வடக்கு பார்த்து உள்ள வாசல் வழியாக உள்ளே நுழைந்ததும் ஹாலின் தென்பக்கத்தில் சார் பதிவாளரின் இருக்கைக்கு முன்பாக தெற்கு பார்த்து அமர்ந்திருந்த பெயர் கேட்டு தெரிந்து கொண்ட உதவியாளர் திருமதி.நந்திதா என்பவரிடம் இருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்ய சொன்னபோது அவரது கைப்பையில் இருந்து ரூ.560/- மட்டும் ஆஜர் செய்து தனது சொந்தப்பணம் என்று சொன்னார். அது தனி நபர் கையிருப்பு பதிவேட்டில் சரிபார்த்து அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. உதவியாளர் திருமதி.நந்திதா இருக்கைக்கு தென்புறத்தில் வடக்கு பார்த்து அமர்ந்திருந்த பெயர் கேட்டு தெரிந்து கொண்ட இணை சார் பதிவாளர் எண் II திரு.உமாபதி என்பவரை சோதனை செய்தபோது அவரது பர்சில் இருந்து ரூ.2,140/- எடுத்து ஆஜர் செய்த அவர் அது தனது சொந்தப்பணம் என்றார். அவரது வலதுபுற பேண்ட் பாக்கெட்டை சோதனை செய்தபோது அதில் கத்தையாக இருந்த பணத்தை

எடுத்து எண்ணிப்பார்த்தபோது அதில் ரூ.8,800/- (2000X1=2000, 500X12=6000, 200X3=600, 100X2=200)ம், இடதுபுற பேண்ட் பாக்கெட்டில் இருந்த கத்தையில் ரூ.4,100/- (2000X1=2000, 500X4=2,000, 100X1=100)ம் இருந்தது. மேற்படி பணம் பற்றி அவரிடம் கேட்டபோது சென்னை செல்வதற்காக எடுத்து வந்ததாக தெரிவித்தார். மேற்படி பணத்தை பணியாளர்களின் சொந்தப்பணப்பதிவேட்டில் சரிபார்த்தபோது அதில் ரூ.2,120/- மட்டும் குறிப்பிட்டிருந்தார். எனவே பணம் ரூ.2,120/-ஐ அவரிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டு மிகுதியாக இருந்த பணம் ரூ.12,920/-ஐ விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் அவரது மேஜையின் மீது குறிப்புகள் எழுதிய ESSAR லெட்டர் குறிப்பேடு ஒன்றும், கரூர் வைஸ்யா வங்கி அவரது மனைவி திருமதி.பிரபாவதி பெயரில் உள்ள கடன் பாஸ்புத்தகம் எண் 124977754ம் இருந்தது. மேற்படி இரண்டு ஆவணங்களும் வழக்கின் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. ஹாலின் மேற்கு பக்கத்தில் உள்ள கணினி அறையில் இருந்த பின்னால் பெயர் கேட்டு தெரிந்து கொண்ட இளநிலை உதவியாளர் திருமதி.தேவியிடம் இருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்ய சொன்னபோது அவரது கைப்பையில் இருந்து ரூ.210/- மட்டும் ஆஜர் செய்து தனது சொந்தப்பணம் என்று சொன்னார். அது தனிநபர் கையிருப்பு பதிவேட்டில் சரிபார்த்து அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. அவரது இருக்கைக்கு வடபுறத்தில் அமர்ந்திருந்த பின்னால் பெயர் கேட்டு தெரிந்து கொண்ட டேட்டா எண்ட்ரி ஆபரேட்டர் திருமதி.ஜெயராணியிடம் இருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்ய சொன்னபோது அவரது கைப்பையில் இருந்து ரூ.250/- மட்டும் ஆஜர் செய்து தனது சொந்தப்பணம் என்று சொன்னார். பின்னர் அவரது கைப்பையை பெண் காவல் ஆய்வாளர் உதவியுடன் சோதனை செய்தபோது, மேற்படி கைப்பையில் ரூ.300/- இருந்தது எடுக்கப்பட்டது. மேற்படி மொத்தப்பணம் ரூ.550/- குறித்து அவரிடம் கேட்டபோது அவர் தகுந்த முகாந்திரம் சொல்லாததால் மேற்படி பணம் ரூ.550/- (100X2=200, 50X2=100, 20X9=180, 10X7=70) கைப்பற்றப்பட்டது. இணை சார் பதிவாளரின் இருக்கைக்கு தென்புறத்தில் உள்ள ஆவண வைப்பறையை சோதனை செய்தபோது ஆவணங்கள் வைத்திருந்த ரேக்கின் நடுவே மறைந்து ஒளிந்து உட்கார்ந்திருந்த பின்னால் பெயர் கேட்டு தெரிந்து கொண்ட திரு.முத்துப்பாண்டியன் என்பவரை விசாரணை செய்தபோது அவர் மேனுவல் வில்லங்க சான்று தொடர்பாக ஆவணங்களை தேடி சார் பதிவாளருக்கு உதவியாக இருப்பதாகவும், இன்று சார் பதிவாளர் அருகே நின்று கொண்டிருந்தாகவும், லஞ்ச ஒழிப்பு போலீசார் வந்தவுடன் பயந்து ஆவண வைப்பறைக்குள் ஓடி ஒளிந்து கொண்டதாகவும், தான் வேலைக்கு வரும் நாட்களுக்கு நாள் ஒன்றுக்கு ரூ.400/- வீதம் சார் பதிவாளர் திரு.உமாபதி அவர்கள் தருவதாகவும் தெரிவித்தார். அவரை சோதனை செய்தபோது அவரது சட்டை பாக்கெட்டில் இருந்த பணத்தை எடுத்து எண்ணிப்பார்க்க

அதில் ரூ.5,600/- (500X10=5,000, 100X5=500, 50X1=50, 10X5=50) இருந்தது. மேற்படி பணம் ரூ.5,600/- பற்றி அவரிடம் கேட்டபோது அவர் தகுந்த முகாந்திரம் கூறாததால் மேற்படி பணம் ரூ.5,600/- கைப்பற்றப்பட்டது. அவரது சட்டைப்பாக்கெட்டில் இருந்த கனரா வங்கி ATM கார்டு எண் 5089 2511 2603 6252, SBI வங்கி ATM கார்டு எண் 5103 7201 6754 0010, திரு.முத்துப்பாண்டியனின் ஓட்டுனர் உரிமம் எண் TN 72 V20090002031, கூட்டுறவுத்துறை விற்பனையாளர் என குறிப்பிடப்பட்டு திரு.முத்துப்பாண்டியன் என்ற பெயரில் உள்ள அடையாள அட்டையின் நகல் மற்றும் அவர் கையில் இருந்த திரு.D.முத்துப்பாண்டி (ஆசீர்வாதம் வகைக்காக) என்ற பெயரில் உள்ள வில்லங்க சான்று விண்ணப்பம் ஆகியவைகள் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. ஹாலின் கீழ்புறம் உள்ள பழைய ஆவணங்கள் அறையில் நடுவில் உள்ள வாசலுக்கு முன் மேற்கு பார்த்து அமர்ந்திருந்த பின்னால் பெயர் கேட்டு தெரிந்து கொண்ட ஓய்வு பெற்ற வைப்பறை எழுத்தர் திரு.குமார் என்பவரை விசாரணை செய்தபோது அவர் தான் மே மாதம் 2018ல் ஓய்வு பெற்றுவிட்டதாகவும், அன்றிலிருந்து அவ்வப்போது பத்திர நகல்கள் தயார் செய்ய வாரத்திற்கு மூன்று நாட்கள் வருவதாகவும், வேலைக்கு வரும் நாட்களுக்கு நாள் ஒன்றுக்கு ரூ.300/- முதல் ரூ.500/- வரை சார் பதிவாளர் திரு.உமாபதி அவர்கள் தருவதாகவும் தெரிவித்தார். அவரை சோதனை செய்தபோது அவரது பர்சில் இருந்து ரூ.440/- எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி பணம் குறித்து கேட்டபோது அவர் தகுந்த முகாந்திரம் சொல்லாதால் மேற்படி பணம் ரூ.440/- (200X1=200, 50X4=200, 20X1=20, 10X2=20) கைப்பற்றப்பட்டது. அவரது சட்டை பாக்கெட்டில் GPF No. 11559/Regn என்ற எண் கொண்ட அவரது பெயரில் உள்ள அடையாள அட்டையின் நகல் இருந்தது. அது விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. சோதனைக்குழு சார்பதிவாளர் அலுவலகத்தினுள் உள்ளே நுழைந்ததை பார்த்ததும் ஹாலின் பழைய ஆவண அறைக்கு செல்லும் வாசலுக்கு அருகில் உள்ள சீல் அடிக்கும் அலுவலக உதவியாளரின் மேஜையின் அருகில் நின்றுகொண்டிருந்த பின்னால் பெயர் கேட்டு தெரிந்து கொண்ட கேமரா இயக்குபவர் திரு.சண்முகநாதன் பழைய ஆவண அறைக்குள் வேகமாக கிழக்கு பார்த்து ஓடி மேற்படி அறையின் நடுவில் உள்ள வாசலுக்கு தென்புறத்தில் உள்ள பழைய ஆவணங்களுக்கிடையே ஒளித்து வைத்த பணத்தை எடுத்து எண்ணிப்பார்த்தபோது அதில் ரூ.9,040/- (500X17=8,500, 200X1=200, 100X3=300, 10X4=40) மும், அவரது பேண்ட் பாக்கெட்டை சோதனை செய்தபோது அதில் ரூ.3,300/- (500X5=2,500, 100X8=800) மும், அவரது பர்சை சோதனை செய்தபோது அதில் ரூ.1,570/- (500X1=500, 200X2=400, 100X6=600, 10X7=70)மும், பர்சில் SBI வங்கி ATM கார்டு எண் 5103 7202 7774 4817மும், கனரா வங்கி ATM கார்டு எண் 5286 7709 7400

2604மும், இருந்தது. அவர் நின்று கொண்டிருந்த அலுவலக உதவியாளர் மேஜையில் இருந்த சிவப்பு நிற பிளாஸ்டிக் டப்பாவை சோதனை செய்தபோது அதில் ரூ.700/- (500X1=500, 100X2=200)ம், அதனுடன் முன்பதிவு செய்ததற்கான ஒப்புகை சீட்டு தற்காலிக எண்.TP/105408583/2021 திருமதி.வசந்தா பெயரில் உள்ளதும், திருமதி.S.R.மந்திர ரூபி, க/பெ.ராதாகிருஷ்ணன் பெயரில் உள்ள கடிதம் ஒன்றும் இருந்தது. மேற்படி பணம் குறித்து திரு.சண்முகநாதனனிடம் கேட்டபோது, அவர் தகுந்த முகாந்திரம் சொல்லாததால் மேற்படி பணம் ரூ.14,610/-ம் மேலே குறிப்பிட்ட ஆவணங்களும் கைப்பற்றப்பட்டது. இணை சார் பதிவாளர் திரு.உமாபதியிடம் இன்று பதிவு செய்த ஆவணங்கள் மற்றும் இன்றைய கணக்கு குறித்து கேட்டபோது, அவர் கணினியில் இருந்து எடுத்த கணக்கு A, D, Sub Division, Section 41, CD fees, Hindu Marriage, Birth and Death ஆகிய தலைப்புகளில் ஆவணங்கள் பதிவு செய்யப்பட்டதாகவும், அதற்கு ஆன்லைன் மூலமாக பணம் செலுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். அதன்படி A தலைப்புகளில் ரூ.3,57,203/-ம், D-தலைப்புகளில் ரூ.15,030/-ம், B-தலைப்புகளில் ரூ.20/-ம், Sub Division-ல் 2,400/-ம் Section 41-ல் ரூ.1,57,478ம் CD கட்டணம் ரூ.1,800/-ம் Hindu Marriage-ல் ரூ.250/-ம், தமிழ்நாடு திருமணம் (TM) ரூ.500-ம், Birth and Death-ல் ரூ.400/-ம் ஆன்லைனில் செலுத்தப்பட்டுள்ளதாகவும், பணமாக எந்த கட்டணமும் வசூல் செய்யப்படவில்லை என்றும் தெரிவித்தார். மேற்படி ஆன்லைனில் ஆவணம் பதிவு செய்யப்பட்டதற்கான விபரங்களை (10 தாள்கள்) கணினியில் பிரிண்ட் எடுத்து வைத்திருந்ததை ஆஜர் செய்தார். பதிவு வைப்பறையில் இருந்த இரும்பு பேழையை திறந்து பார்க்க அதில் 'சி' கணக்குப்படி ரூ.1,387/-ம் 'எப்' கணக்கில் ரூ.4/-ம் நிரந்தர வைப்புத்தொகையில் ரூ.250/-ம் இருந்தது. அது சம்பந்தப்பட்ட பதிவேட்டை சரிபார்த்து சார் பதிவாளர் திரு.உமாபதி அவர்களிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. இது குறித்து தயாரிக்கப்பட்ட இந்த செயல்முறை நடவடிக்கை இன்று (30.09.2021) இரவு 23.45 மணிக்கு முடிக்கப்பட்டது. ஒப்பம். S.K.கனகராஜ், மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலரின் நேர்முக உதவியாளர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், திருநெல்வேலி. ஒம்.மற்றும் சிலர்.

Sir, Received the complaint on 01.10.2021 at 10.30hrs and registered a case in Tirunelveli V&AC, Cr.No.10/2021 u/s 7(a) of PC Act 1988 (as amended in) Act 16 of 2018 r/w 102 Cr.PC on 01.10.2021 at 11.00 hrs Sd.E.Mcclarine Eskhol, DSP, V&AC, Tirunelveli.

The original complaint, Proceedings of Personal Assistant to District Supply Officer, Tirunelveli and original FIR were sent to the Hon'ble Special Judge for Trial of cases under the Prevention of Corruption Act, Tirunelveli and copies sent to concerned higher officials.

1/10/21
DSP, VSAC
Tirunelveli.